
# லோகேஸ்வரம்



உ

சிவமயம்



ஊரிக்காடு வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும்,
மயிலணி வடக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் மாணிக்கம் இராசரத்தினம்
# (லோகேஸ்வரன்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# லோகேஸ்வரம்

19.09.2008

# சமர்ப்பணம்

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழ நல்வழி புகட்டி வாழ்வித்த
அன்புத் தெய்வத்தின் மறைவு
என்றுதான் துன்பத்தை நீக்குமோ
இனி எப்பிறப்பில் உங்களைக் காண்பது
இன்றும் என்றும் மறவோம் எனவே
உங்கள் நினைவாக இம்மலர் ஆக்கி
உங்கள் திருவடி சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



# அமரர் திரு.மாணிக்கம் இராசரத்தினம்

## (லோகேஸ்வரன்)

தோற்றம்
24.12.1947

மறைவு
20.08.2008

### திதி வெண்பா

விளங்கு புகழ் சர்வதாரி வருஷம் வீசும் புகழ்
ஆவணி தனில் உத்தரட்டாதி திதி கேட்டைகாண
மயிலணியில் மாணிக்கம் இராசரத்தினம்
இறைவன் பாதம் அடைந்தீரே.

உ
சிவமயம்

# பஞ்சபுராணத் திரட்டு



## விநாயகர் வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வல முறை யிறையே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல் வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
  உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
  சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
  அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
  தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்கு சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னு
ஆலிக்கும் மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நிடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோதமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்



# சமுதாயப்புரட்சிக்கு தன்னை வித்திட்ட சீர்திருத்தச் சிங்கம்

தோழர் அமரர் மா.இராசரத்தினம் (லோகேஸ்வரன்) அவர்கள். சாதியம் என்னும் கொடிய நோய்க்கு மருத்துவம் கண்ட பெரியார்கள் வரிசையில் கார்த்திகேசன் பொன்.கந்தையா சண்முகநாதன் M.C.சுப்பிரமணியம், S.T.N.நாகரட்ணம், கே.டானியல் போன்ற பெருந்தகைகளின் வரிசையில் இறுதிவரை மாக்சீசம் என்னும் மகத்தான பாதையில் நின்று போராட்டம், சொற்போர், விமர்சனம், பிரச்சாரம், துண்டுப்பிரசுரம் என்று பலகளம் கண்ட அஞ்சா நெஞ்சம், மனிதநேயம், ஈவு இரக்கம், தயவுதாட்சனை, மனிதப்பண்பு, மனித ஒழுக்கம், மனித விடுதலை இவைகளையே இறுதிவரை நேசித்தாய் இதற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த காவல் கோபுரம் நீ. நீ சாகவில்லை உமது செயல் அத்தனையும் இன்று சான்றுகளாய் உள்ளது.

கே.டானியின் பஞ்சகோணம் என்னும் நூல் அதனைப் படம் பிடிக்கின்றது. நீ உன் நெஞ்சை அசைத்து ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம் என்பாய் அதற்காக லோகேஸ்வரன், திருப்பதி, குணசிங்கம், முருகையா என்று நாலுகால் மண்டபம் அமைத்து தோல்விகாணா பல்லாயிரம் வெற்றி கண்ட மாமனிதன் நீ. யாழ்க்குடாவில் இந்தநோயில் பீடித்திருந்த கிராமம் அத்தனையும் உன்பேர் சொல்லும் புன்னாலைக்கட்டுவன், சங்கானை, சுன்னாகம், புத்தூர், நெல்லியடி, உடுப்பிட்டி, தொண்டைமநாறு, வல்வெட்டித்துறை, எழுதுமட்டுவாழ், சரசாலை, மட்டுவில், கைதடி இந்த கிராமங்கள் உன்னை ஏணைகட்டித் தாலாட்டும் கடசி தலைமை தோழமை நிர்வாகம் எற்பது தட்டிக்கழிக்காமை உன்தனிச் சிறப்பு நீ கட்டிய நாலுகால் மண்டபம் இன்று நாற்காலை இழந்து நிற்பதும் நெஞ்சைப் பிளக்கின்றது. உன் இயற்கை மரணம் மறுபுறத்தில் ஆறுதல் தருகின்றது.

**இப்படிக்கு**
**தோழமையுடன்**
**திருப்பதி, குணசிங்கம், முருகையா**




# தீரர்கள் சாவதில்லை

லோகேஸ்வரன் மறைந்தான்
நொந்து மனம் தீய்கிறது
எண்ணங்கள் பின் ஓடி
எதை எதையோ தேடி நிதம்
செய்த செயல் எல்லாமே
சீர்தூக்கிப் பார்க்கிறது
துள்ளி எழும் நினைவில்
துயரந்தான் சூழ்கிறது
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தின் முன்தோன்றி
தொல்உலக நாகரிகத்
தொண்மையிலும் முன்னணியில்
தோற்காமல் நிற்கும் எங்கள்
தூய்மைத் தமிழினத்தின்
காற் காசுக்கு ஆகாத(து)
கண்டக் குணத்தின் சாதிவெறி
ஏற்காதீர் இப்புளுகை
ஏமாந்து போகதீர்
தோற்காத் தமிழ் நெறியை
தூய்மை இல்லாச் சைவத்தை
காப்பாற்றக் கோவில்களைக்
தேர் இழுப்பும் சப்பறமும்
தேங்காய் உடைப்புகளும்
தூக்கு துலா என்று
தொங்குகின்ற காவடியும்
பாற் குடங்களைச் சுமந்து
பவனிவரும் பெண்டுகளும்
தொப்பை பயிறுகள்மேல்

தொங்குகின்ற சங்கிலிகள்
வெட்கமின்றிச் சுமந்து கொண்டு
வெறும் உடம்போடு ஆடுவதும்
அன்பறியாப் போக்கிரிகள்
அறங்காவலர் என்றும்
போதைப் பிரியர்கள்
பொட்டும் திருநீறும்
மேனியிலே பூசிவிட்டு
மிளகும் இளநீரும்
பால்பழமும் தீர்த்தமுமாய்
பக்குவமாய்க் கந்தசஷ்டி
விரதம் ஆனுஷ்டிக்கும்
வேளையிலும் கோவிலிலே
நின்று கொண்டு விரதம்
முடிந்து மறுநாளில்
நிற்பதற்கு மாமிசமும்
தினைக்க மதுவகையும்
தேடிவைக்கும் தீக்செயலைக்
கந்த புராண தத்துவ கலாசாரம் என்கின்ற
விந்தை மிகு பக்தர்கள்
வேடிக்கை கண்டு அனுபவித்துக்
கொண்டவன் தான் எங்கள்
லோகேஸ்வரன் அறிவீர்
சாதிக் கொடுமைகளைச்
சந்திக்க சங்கரிக்க
வாதிக்க பேதிக்க
வழித்துத் துடைத்தெறிய
நீதிக்குமுன் அவற்றின்
நீசத்தனம் கிழித்து
போதித்துச் சைவத்தால்
தமிழால் அவைபோடும்
வேசம் கலைத்து அதன்
விஷம் நிறைந்து வில்லுமமைத்து

குளிர்விக்கும் தந்திரத்தை
நாசூக்காய் பொய்கலந்து
நல்ல உபதேசம் என்று
போசாக்கை காட்டுகின்ற
புராணப் பிரசங்கங்களின்
வேடிக்கைப் பேச்சுக்களை
விஷம் நிறைந்த நகைச்சுவையை
தேடித் தகர்த்தெறியத்
தெளிந்த அறிவியலார்
கூறியதால் இவ்வுலகில்
உண்மை புரிந்ததனால்
சாதிப்பிரிவு சொல்லி
சன்மார்க்கப் பொய் கூறி
வர்ணப் பிரிவுரைத்து
மனுதர்மக்கதை புனைந்து
ஏழை எளியயோரை
எப்போதும் ஏமாற்றித்
தாழ்நிலையில் தள்ளிவிட்டுத்
தாங்கள் அவர் உழைப்பில்
தங்களது வர்க்கத்தை
ஆளவந்த சாதி என்றும்
அதிகார ஆட்சியிலே
உண்டு கொடுத்து ஏழை
உதிரம் குடித்துயர்ந்த
சங்கதி எல்லாம் அறிந்து
சரியான பாதையிலே
பொங்கி எழுந்த புதுப் புரட்சி ஒன்று
தோன்றிடவே வேண்டுமென
தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை
பொதுவுடமைத்தத்துவத்தின் போதனையாய் தேர்ந்தெடுத்து
போராடி வெற்றிகளைப் பெருக்கிவைத்த வீரர்களில்
லோகேஸ்வரன் அமரன்
தீரர்கள் சாவதில்லை.

**தங்கவடிவேல்**
**(லண்டன்)**



முன்பள்ளி சிறார்களுடன் லோகேஸ்வரன் அவர்கள்



# அஞ்சா நெஞ்சம் கொண்ட ஒரு போராளி

லோகேஸ்வரன் மறைந்த செய்தி அறிந்ததும் திகைத்துப் போனேன். கனடாவில் வாழுகின்ற அவரின் உறவினர் செய்தியை உறுதிப்படுத்தினர். எல்லோரும் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தோம்.

இனவந்திரங்களால் சிதையுண்டு போயிருக்கும் இலங்கையின் இன்றைய நிலைமைகளோடு லோகேஸ்வரன் நிலையையும் எண்ணி மனம் வருந்தியது கடந்த வருடம் தொடக்கம் அவர் நோய்வாய்ப்பட்டு சிரமப்பட்டுள்ளார். அத்துடன் வைத்தியசாலைகளில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்றுவந்துள்ளார். இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இனவெறிப்பொர்க் கொடிகள் அவருக்கான வைத்திய சிகிச்சைகளையும் சீர்குலைத்துள்ளன. நாள்தோறும் நொந்தும் கைந்தும் சிரமப்பட்டே அவர் ஆவி பிரிந்துள்ளது என உணர முடிந்தது.

லோகேஸ்வரனின் தந்தை மு.மாணிக்கம் பருத்தித்துறை கோணந்தீவைச் சேர்ந்தவர். பருத்தித்துறையில் நீதிமன்றத்தில் ஊழியராகப் பணிபுரிந்தவர். பின்னர் இலங்கை இராணுவத்தில் 1939 முதல் 1945 வரை இருந்தார். அது இரண்டாம் உலகமகாயுத்த காலம் பிரித்தானியரே இலங்கையை ஆண்டுவந்தனர்.

வல்வெட்டித்துறை ஊரிக்காடு மாணிக்கம் கீதேவி தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாக சரஸ்வதியை திருமணம் செய்த மு.மாணிக்கம் வல்வெட்டித்துறையில் சிதம்பராக் கல்லூரிக்கு அருகே வாழ்ந்தார். மாணிக்கம் சரஸ்வதி பெற்ற பிள்ளைகள் எழுவர். தவமணி, குணமணி, இராசரத்தினம், சிவசுப்பிரமணியம், ஜெயமலர், வானதி என்பன அவர்களின் பெயர். ரத்தினம் சனசமூக அடக்குமுறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும், அநீதிகளுக்கும்

எதிரான உணர்வுகளைத் தன் பிறவிக்குணமாகக் கொண்டார். அச்சமின்மையும், அபாரத் துணிச்சலும், நெஞ்சுரமும் நிரம்பியவர். போர்க்குணமும் சுறுசுறுப்பும் அவரது இயல்பு.

சாதி அடக்குமுறை காரணமாக தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகளுக்கு கல்விகற்கும் உரிமையை மறுத்து நின்ற பாடசாலைகளில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும் ஒன்று இக்கல்லூரியின் விளையாட்டு மைதான எல்லையோடு தான் லோகேஸ்வரனின் வீடு இருந்தது. 1958ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா ஆட்சியில் எல்லாப் பாடசாலைகளும் தேசியமயமாகின இதனால் எல்லாச்சாதிப் பிள்ளைகளும் எல்லாப் பாடசாலைகளிலும் படிக்கலாம் என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்பின்னரும் கிதம்பராவில் சாதியில் குறைந்த பிள்ளைகளுக்கு அனுமதி இல்லை என்றே பள்ளி நிர்வாகம் கூறியது. லோகேஸ்வரன் நான் சிதம்பராவில் தான் படிப்பேன் என்று விடாப்பிடியாய் நின்றார். தந்தையும் ஒப்புக்கொண்டார். மிகச்சிறப்பாக தமிழ் பேசும் வல்லமை மிகுந்த அவர் பெரும் போராட்டம் நடத்திய பின்னரே லோகேஸ்வரனுக்கு சிதம்பராக் கல்லூரி அனுமதி அளித்தது.

ஆமாம், சிதம்பராக் கல்லூரியில் முதன் முதலாக அனுமதிபெற்ற சிறுபான்மைத் தமிழ் மாணவன் லோகேஸ்வரனே. மார்க்சீசக் கொள்ளைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட லோகேஸ்வரன் சமூக அடக்கு முறைகளுக்கு எதிரான போராளியாக மாறினார். கம்யூனிஸ் இயக்கத்தின் வழிமுறைகளே இன, மொழி, மத, நிற, சாதி பேதங்களை ஒழிக்கவல்லது என்ற மனத்தெளிவு இளைய வயதிலேயே அவரிடம் குடிகொண்டது.

**அ.வீரசிங்கம்**
**(கனடா)**



# சாகும்வரை அவன் ஒரு போராளி

20.08.2008 அன்று ஒரு கம்பூனிஸ் போராளி மரணமடைந்தான். அவன் அறிவு தெறிச் சூலத்திலிருந்து இறக்கும் வரை அவன் போராளியாகவே வாழ்ந்தான். 1966ம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சாதி அமைப்பு, சமத்துவ நீதி ஓங்கட்டும் என்ற புரட்சிகர கோசத்துடன் சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நடத்திய சட்டவிரோத ஊர்வலத்துடன் அவன் போராளியாகினான்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக தலைமை தாங்கி பல போராட்டங்களை நடத்திய மறைந்த தலைவரும் "பஞ்சமர்" நாவலாசிரியருமான தோழர் K.டானியலின் பாசறையில் வளர்ந்த மறைந்த தோழர் மா.லோகேஸ்வரன் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். மறைந்த தோழர் என சண்முகதாசனை தலைவராகக் கொண்ட இலங்கை கம்யூனிஸ் கட்சியின் முன்னணி ஊழியர்களில் எம் லோகேஸ்வரனும் ஒருவர். அக்கட்சியின் வளர்ச்சிக்காக ஆரம்பத்தில் ஊரிக்காடு, தொண்டமநாறு, அல்வாய், கம்பர்மலை போன்ற இடங்களிலும் திருமணத்தின் பின் சுன்னாகம், சூராவத்தை, மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களிலும் துணிச்சலுடன் கட்சி வேலை செய்தவர்.

பாட்டாளி வர்க்கம், பாராளுமன்ற சமாதானப் பாதையால் அரச அதிகாரத்தை கைப்பெற்ற முடியாது மக்கள் கலந்து கொள்ளும் புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே அரச அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்ற கொள்கையில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர். 1977ம் ஆண்டு வரை சுன்னாகம் சந்தையில் சாதிவெறியர்களின் ஆதிக்கம் நிலவிய வேளையில் அதற்கெதிராக தோழர் லோகேஸ்வரன் தலைமை தாங்கி போராடி தாழ்த்தப்பட்ட மக்களும் சந்தையில் மற்றசாதியினருடன் சமமான அந்தஸ்தையுடையவர்கள் என்ற நிலையை உருவாக்கினார். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின்

மறைந்த தலைவர் S.T.N.நாகரத்தினத்துடன் மிக நெருக்கமான தொடர்பை கொண்டிருந்தார். அவரது அன்பையும் ஆதரவையும் பெற்று அவரால் மதிக்கப்பட்ட மாபெரும் போராளியாக எம் லோகேஸ்வரன் திகழ்ந்தார்.

அவர் சங்கானை சண்டிலிப்பாய், நிச்சாமம் புளியடி போன்ற இடங்களில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைப்போராட்டங்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்ட ஒரு போராளி. அம் மக்களால் மிகவும் விரும்பப்பட்டவர். எங்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் துணிச்சலுடன் சென்று அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவுவதும் அத்துடன் அந்த மக்களுக்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினதும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

மக்களுடன் மிக நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தினார். 1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மிக மோசமாக சாதிவெறியால் அடக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்தார்கள். அந்த விவசாய கூலிகளுக்கு சாதிவெறியர் மிககுறைந்த கூலி கொடுத்தார்கள் அத்துடன் சிரட்டையில் தேனீரும் தட்டுவத்தில் உணவும் வழங்கினார்கள். கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வெளியே நின்று கும்பிடுவது சட்டமாகி இருந்தது. புன்னாலைக்கட்டுவன் சந்தியில் உள்ள தேனீர்கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேணிகளில் தேனீர் அருந்தும் நிலையும் இருந்தது. இதனை கண்ணுற்ற லோகேஸ்வரன் அக்கிராமங்களில் உள்ள வாலிபர்களையும் விவசாயிகளையும் திரட்டி இவ்வகையான அநீதிகளை எதிர்த்துப்போராடி இன்று அம்மக்கள் உரிமை பெற்ற மக்களாக வாழும் நிலைக்கு மறைந்த தோழர் லோகேஸ்வரன் மிக முக்கிய காரணகர்த்தாக்களில் ஒருவராக திகழ்ந்தார். அன்னார் இறக்கும் வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் தன்னால் இயன்ற உதவிசெய்து கொண்டே தனது வாழ்வை முடித்த ஒரு உத்தம போராளியாவார்.

இங்ஙனம்
இலங்கை கமியூனிஸ்ட் கட்சிப்
போராளிகளின் சார்பில்
**எம்.ஏ.சி.இக்பால்**

தெகிவளை,
கொழும்பு.




**அமரர்கள் திரு.திருமதி மாணிக்கம் சரஸ்வதி** அவர்களின் ஞாபகார்த்தமாக **லோகேஸ்வரன்**
அவர்களால் கட்டுவிக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையம்




# நன்றி நவில்கின்றோம்

அமரர் மாணிக்கம் இராசரத்தினம் அவர்களின்
மறைவுச் செய்தி கேட்ட நேரம்முதல்
உடன் வந்து ஆறுதல் கூறியோருக்கும்,
தொலைபேசி மூலம் அனுதாபம்
தெரிவித்தோர்க்கும்,
இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து
கொண்டோர்க்கும்,
பல்வேறு வழிகளிலும்
அனுதாபம் தெரிவித்தோர்க்கும்,
மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு
உதவிகள் செய்தோர்க்கும்
எம் மனமார்ந்த நன்றிகள்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

# வம்சாவழி



மாணிக்கம் + சரஸ்வதி
நடேசு + குணமணி
தவமணி + பூபாலசிங்கம்
குணமணி + திருநாவுக்கரசு
இராசரத்தினம்
யோகமலர் + மாணிக்கம்
சிவசுப்பிரமணியம் + ராணி
ஜெயமலர் + துரை
வானதி + சந்திரன்
கருணவதி
நற்குணமூர்த்தி + நங்கி
உதயகுமாரி + ஞானசேகரம்
விஜயகுமாரி + லோகேஸ்வரன் (வேவி)
கமலகுமாரி + கனகரத்தினம்
உதயகுமார் (உதயன்) + சகிலா
சாந்தகுமாரி (சாந்தா) + தர்மராசா
சாந்தகுமார் (சாந்தன்) + மரினா
இராசரத்தினம் + கருணவதி
சறோஜினி + சிவபாதராஜன்
ஷாருகன்
சயன்
திவ்யா
ராஜ்குமார் + ஜெசிதா
அனுரா + தயாளன்
டிலக்ஷன்
திலக்ஷா
ஸ்ராலின் + நிஷா



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கின்றதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொருநாள அது வேறொருவருடையதாகின்றது
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



— பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் —

Muthu Printers, Chunnakam.